# கோவிட்-19 பற்றி கேள்விகள் இருக்கின்றனவா? இதோ சில பதில்கள்.

Ontario

### கோவிட்-19 என்றால் என்ன?

கோவிட்-19 என்பது 2019 இன் கடைசிப் பகுதியில் அடையாளம் காணப்பட்ட ஒரு கொரோனா வைரஸ் ஆகும். கொரோனா வைரஸ்கள் பல வைரஸ்களைக் கொண்ட ஒரு பெரிய குடும்ப வைரஸ்கள் ஆகும், அவை லேசானது முதல் கடுமையான சுவாச நோய்த்தொற்றுகளை ஏற்படுத்தும் என்று அறியப்படுகிறது. கோவிட்-19 என்பது புதிய வகை(நாவல்) கொரோனா வைரஸ்களில் ஒன்றாகும்.

### கோவிட்-19 எப்படி பரவுகிறது?

கோவிட்-19 தொற்றைக் கொண்டிருக்கும் ஒருவரின் சுவாச நீர்த்துளிகள் மூலம் பொதுவாக இந்த வைரஸ் பரவுகிறது. இருமுதல், தும்முதல், பேசுதல், சுவாசித்தல் மற்றும் பாடுதல் மூலம் இது ஏற்படலாம். இந்த வைரஸ் இருக்கக்கூடிய ஒரு மேற்பரப்பையோ பொருளையோ தொட்டுவிட்டு கழுவப்பாடாத கைகளால் வாய், மூக்கு அல்லது கண்களைத் தொடுவதன் மூலமாகவும் கோவிட்19 பரவலாம். ஒருவருக்கு நோய் அறிகுறிகள் தோண்றுவதற்கு முன்பாகவே வைரஸ் பரப்பப்படலாம்.

### கோவிட்-19 வக்சீனை (தடுப்பூசி) யார் பெற்றுக்கொள்ளலாம்?

ஒன்ராறியோவில் வசிக்கும் ஐந்து வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் முதலாவது மற்றும் இரண்டாவது கோவிட்-19 ஊசியை பெற்றுக்கொள்ளலாம். 12 வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் பூஸ்டர் ஊசியையும் பெற்றுக்கொள்ளலாம்.

கடுமையான சுகவீனம் மற்றும் மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெறும் அபாயத்தைக் கொண்டிருக்கிறார்கள் என்ற அடிப்படையில் நோயெதிர்ப்பு சக்தி குறைந்து போகலாம் என்ற காரணத்தினால், நீடிக்கப்பட்ட முதன்மைத் தொடர் மற்றும் பூஸ்டர் ஊசியின்(கள்) ஒரு பகுதியாக கோவிட்-19 இன் மூன்றாவது வக்சீனை பெற்றுக்கொள்ள சிலர் தகுதிபெறுவதோடு அதைப் பெற்றுக்கொள்ளும்படி பரிந்துரைக்கப்படுகிறார்கள். தகுதிபெறுவது சம்பந்தமான மேலதிக தகவலுக்கு ontario.ca/covidvaccineinfo க்குச் சென்று பாருங்கள்.

### நான் ஏன் கோவிட்-19 தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவேண்டும்?

கோவிட்-19 மற்றும் அதன் பல வகைகளால் கடுமையாக நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதித்து சிகிச்சைபெறுவதிலிருந்து உங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும், உங்கள் சமூகத்தையும் பாதுகாப்பதற்கு நீங்கள் செய்யக்கூடிய மிக முக்கியமான விஷயம் வக்சீனை பெற்றுக்கொள்வதாகும்.

கோவிட்-19 வக்சீன்கள் கொரோனா வைரஸ் நோய்த்தொற்றை ஏற்படுத்தாது. அவை உங்கள் நோயெதிர்ப்பு சக்தியை மேம்படுத்த உதவுவதால், உங்கள் உடல் இந்த நோயை இலகுவாக முறியடித்துவிடும். இது நீங்கள் கோவிட்-19 ஐ பெற்றுக்கொள்ளும் அபாயத்தை குறைப்பதோடு, நோய் தொற்றிவிட்டால்கூட அதன் அறிகுறிகள் கடுமையாவதை தவிர்க்கும்.

### பொதுசன சுகாதார நடவடிக்கைகள் நீக்கப்பட்டுவரும்போது நான் ஏன் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவேண்டும்?

பொதுசன சுகாதார மற்றும் வேலைத்தல பாதுகாப்பு நடவடிக்கைகள் நீக்கப்படுவது கோவிட்-19 மறைந்துவிட்டது என்பதையோ கொள்ளைநோய் முடிந்துவிட்டது என்பதையோ அடையாளப்படுத்துவதில்லை. தடுப்பூசியை போட்டுக்கொள்வது கோவிட்-19 க்கு எதிரான மிகச்சிறந்த பாதுகாப்பாக தொடர்ந்து இருப்பதோடு இந்த நோய்க்கு எதிராக நாம் இதுவரை செய்திருக்கும் முன்னேற்றங்களையும் பாதுகாப்பதற்கும் உதவுகிறது.

பரிந்துரைக்கப்படும் அனைத்து கோவிட்-19 தடுப்பூசிகளையும் பெற்றுக்கொள்வதுதான் கோவிட்-19 மற்றும் அதன் பல வகைகளில் இருந்து உங்களையும், உங்கள் அன்புக்குரியவர்களையும், உங்கள் சமூகத்தையும் பாதுகாப்பதற்கு நீங்கள் செய்யக்கூடிய மிக முக்கியமான விஷயமாக இருக்கிறது. கடுமையான சுகவீனம், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெறும் மற்றும் உயிரிழக்கும்

அபாயத்தை இது கணிசமான அளவு குறைக்கிறது.

## கோவிட்-19 பூஸ்டர் வக்சீன் தேவையானதா?

கோவிட்-19 வக்சீனின் முதன்மைத் தொடர் கடுமையான சுகவீனம் மற்றும் மருத்துவமனையில் சேர்க்கப்படுவதற்கு எதிராக மிகவும் பயனுள்ளதாக இருந்தாலும், இந்த கோவிட்-19 முதன்மைத் தொடரின் பாதுகாப்பு காலப்போக்கில் குறைந்துபோவதால், முக்கியமாக வைரஸின் ஆபாத்தான புதியவகைகளில் இருந்து பாதுகாக்கும் தன்மை குறைந்து போவதால், பரிந்துரைக்கப்படும் அனைத்து கோவிட்-19 வக்சீன்களையும் நீங்கள் பெற்றுக்கொண்டிருப்பது முக்கியம்.

18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் இரண்டாவது வக்சீனை பெற்றுக்கொண்டு மூன்று மாதங்களளுக்கு (84 நாட்கள்) பின் முதலாவது பூஸ்டர் ஊசியை பெற்றுக்கொள்ள ஏற்பாடுசெய்யலாம். 12 முதல் 17 வயதுடையவர்கள் இரண்டாவது வக்சீனைப் பெற்று ஆறு மாங்களுக்கு (168 நாடகள்) பின் முதலாவது பூஸ்டர் ஊசியை பெற்றுக்கொள்ள ஏற்பாடுசெய்யலாம். மேலும், இரண்டாவது பூஸ்டர் ஊசியை பெற்றுக்கொள்ள சிலர் தகுதிபெறலாம். மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து ontario.ca/covidvaccineinfo க்குச் செல்லுங்கள்.

## நான் ஏற்கனவே கோவிட்-19 தொற்றி குணமடைந்துவிட்டேன். அப்போதும் நான் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டுமா?

ஆம், கடுமையான சுகவீனமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்படுவதிலிருந்து அதிகரித்த பாதுகாப்பைப் பெற வேண்டுமென்றால் பரிந்துரைக்கப்படும் அனைத்து கோவிட்-19 தடுப்பூசிகளையும் நீங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கோவிட்-19 இலிருந்து நீங்கள் குணமடைந்துவிட்டாலும், உங்களுடைய நோயெதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கும் என்பதால், மீண்டும் வைரஸ் தொற்றிக்கொள்ளலாம், அறிகுறிகள் எதுவும் இல்லாமலேயே நீங்கள் மற்றவர்களுக்கு நோயைப் பரப்பலாம். புதிய வைரஸ் வகைகள் பரவி வருவதால் கோவிட்-19 வக்சீன்களைப் பெற்று நீங்கள் தயாராக இருப்பது முக்கியம். உங்களுக்கு அண்மையில் கோவிட்-19 வந்திருந்தால், கோவிட்-19 வந்ததிலிருந்து ஆறு மாதங்கள் வரை பொறுத்திருந்து உங்கள் அடுத்த வக்சீனை பெற்றுக்கொள்ளலாம். உங்களுடைய வயது, எத்தனை வக்சீன்களை ஏற்கெனவே பெற்றுவிட்டீர்கள் மற்றும் உங்கள் ஆரோக்கிய நிலை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் வக்சீனை பெற்றுக்கொள்வதற்கான உகந்த நேரத்தைப் பற்றிய மேலதிக தகவலை பெற்றுக்கொள்ள உங்கள் உடல்நல பராமரிப்பு வழங்குபவரிடம் பேசுங்கள்.

## எனக்கு பக்கவிளைவுகள் ஏற்படுமா?

ஏனைய வக்சீன்களைப் போட்டுக்கொள்ளும்போது ஏற்படுவது போன்ற, சில மணி நேரம் முதல் சில நாட்கள் வரை நீடிக்கும் லேசான பக்கவிளைவுகள் மற்றும் பிரதிபலிப்புகளை சிலர் அனுபவிக்கலாம். கோவிட்-19 க்கு எதிராக நோயெதிர்ப்பு சக்தியை கட்டியெழுப்புவதற்கான உடலின் முயற்சியின் ஒரு பகுதிதான் இந்த பக்கவிளைவுகளாகும். நீங்கள் வக்சீன் போட்ட இடத்தில் நிறம் மாறுதல், (உதாரணம், சிகப்பு அல்லது நாவல்) வலி அல்லது வீக்கம், மற்றும் களைப்பு, தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி, குளிர் அல்லது லேசான காய்ச்சல் போன்றவற்றை மிகவும் பொதுவான பக்கவிளைவுகள் உட்படுத்தும்.

பக்கவிளைவுகள் உங்களுக்கு கவலையை ஏற்படுத்தினால் அல்லது சில நாட்களுக்குப் பின் போய்விடவில்லை என்றால், உங்களுக்கு உடல்நல பராமரிப்பு வழங்குபவரை தொடர்புகொள்ளுங்கள்.

## கோவிட்-19 வக்சீன்கள் பாதுகாப்பானவையா?

ஆம். ஹெல்த் கனடா, உலகிலேயே மிகச் சிறந்த அறிவியல் ஆய்வு அமைப்புகளில் ஒன்றைக் கொண்டிருப்பதோடு, வக்சீன்கள் பாதுகாப்பானவையாகவும், பயனுள்ளவையாகவும், உற்பத்தி மற்றும் தரத்தின் மதிப்பளவு மிக உயர்ந்ததாக இருக்கும் வக்சீன்களை மட்டுமே அங்கீகரிக்கும்.

ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட வக்சீன்கள் மட்டுமே ஒன்டாரியோவில் வழங்கப்படும்.

Health Canada’s website இல் வக்சீன்களைப்பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

### இவ்வளவு விரைவாக தயாரிக்கப்பட்ட வக்சீன்களைப் பற்றி நான் கவலைப்பட வேண்டுமா?

இல்லை. பாதுகாப்பானவை பயனுள்ளவை என ஹெல்த் கனடாவினால் தீர்மானிக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட வக்சீன்கள் மட்டுமே ஒன்டாரியோவில் வழங்கப்படும்.

உலகம் முழுவதும் முன்பு எப்போதுமே கண்டிராத அளவு ஒத்துழைப்பும், நிதி முதலீடும் இந்த முயற்சியில் செய்யப்பட்டதால்தான் இந்த வக்சீன்கள் ஏனைய வக்சீன்களைவிட விரைவாக தயாரிக்கப்பட்டன.

அத்தோடு ஆய்வாளர்கள் 10 வருடங்களுக்கும் அதிகமாக mRNA vaccines ஐ (mRNA வக்சீன்கள்) படித்து ஆய்வுசெய்து கொண்டிருந்தார்கள். அதனால்த்தான் கோவிட்-19 வக்சீன்களை தயாரிப்பதற்கு mRNA தொழில்நுட்பத்தை விரைவாக பயன்படுத்த முடிந்தது.

கோவிட்-19 வக்சீன்கள் விரைவாக தயாரிக்கப்பட்ட அதேவேளையில் அவை பாதுகாப்பானவையாகவும், பயனுள்ளவையாகவும் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து படிமுறைகளும் எடுக்கப்பட்டன.

### வக்சீனுக்கான அங்கீகாரப் படிமுறைகள் என்ன?

கோவிட்-19 வக்சீனை தயாரிப்பதில் உலகம் முழுவதிலும் இருந்து பாரிய வளங்கள் பயன்படுத்தப்பட்டது, வக்சீனை அங்கீகரிக்கும் படிமுறையை திறமையாகவும் வெற்றிகரமாகவும் செய்வதற்கு உதவியது. ஏற்கெனவே இருந்த ஆய்வுத் திட்டங்களை தேவைக்கேற்ப மாற்றியமைத்தல், விஞ்ஞானிகளுக்கும் அரசாங்கங்களுக்குமிடையே சர்வதேச கூட்டுச்சேர்தல், ஒதுக்கப்பட்ட நிதியை அதிகரித்தல், மருத்துவ பரிசோதனையில் பங்கேற்பாளர்களின் விரைவான ஆட்சேர்ப்பு, மற்றும் வக்சீனின் திறனை காண்பிப்பதற்கு மருத்துவ பரிசோதனைகளை விரைவாக செய்தல், போன்றவற்றை இது உட்படுத்தும். வக்சீன்கள் கனேடியர்களுக்கு பாதுகாப்பானது மற்றும் பயனுள்ளது என அங்கீகரிப்பதற்கு முன் கனடாவின் மிகச்சிறந்த சுயாதீன விஞ்ஞானிகள் அனைத்து தரவுகளையும் முழுமையாக பரிசீலனை செய்தனர். இந்த வக்சீன்களை அங்கீகரிப்பதில் அனைத்து பாதுகாப்பு படிமுறைகளும் கடைப்பிடிக்கப்பட்டன.

மறுபார்வை மற்றும் அங்கீகாரப் படிமுறைகளைப் பற்றி Health Canada’s website. இல் மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

### இந்த வக்சீன்களின் நீண்ட-கால பக்கவிளைவுகள் என்ன?

வக்சீன்களின் நீண்ட-கால பக்கவிளைவுகள் பற்றி தொடர்ந்து கொண்டிருக்கும் ஆய்வுகளின்படி இன்றுவரை எந்த ஒரு பாரதூரமான பக்கவிளைவுகளும் காணப்படவில்லை. ஆய்வுகளின்போது வக்சீனைப் பெற்றுக்கொண்டவர்கள் நீண்ட-கால பக்கவிளைவுகள் ஏற்படுகின்றதா என தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறார்கள்.

வக்சீனைபெற்றபின் ஏற்படும் பாதகமான நிகழ்வு (adverse events following immunization AEFIs) பற்றி மேலும் தெரிந்துகொள்ள அல்லது வக்சீனைப்பெற்றபின் ஏற்படும் பாதகமான நிகழ்வு AEFIs ஒன்றைப் பற்றி அறிவிக்க Public Heath Ontario’s vaccine safety web page க்கு செல்லுங்கள்.

### இரண்டாவது வக்சீன் அல்லது பூஸ்டர் ஊசிகளின் பக்கவிளைவுகள் முதலாவது வக்சீனின் பக்கவிளைவைவிட மோசமானதா?

இரண்டாவது வக்சீனை பெற்றுக்கொண்ட பின் சிலருக்கு கடுமையான பக்கவிளைவுகள் ஏற்படலாம். உங்கள் நோயெதிர்ப்பு சக்தி பாதுகாப்பை பலப்படுத்துவதுதான் பக்கவிளைவுகளுக்கான காரணம் என்பதால், முதலாவது வக்சீனின் மூலமாக உங்கள் நோயெதிர்ப்பு சக்தி பலப்பட்டிருப்பதால் இரண்டாவது வக்சீனைப் பெற்றதும் கடுமையான நோயெதிர்ப்பு விளைவுகள் ஏற்படுகிறது. இப்படி நிகழ்வது நல்ல விஷயம் என்பதோடு வக்சீன் நன்றாக வேலை செய்கிறது என்பதற்கான அடையாளமாகவும் இருக்கிறது.

பூஸ்டர் ஊசிக்கான பக்கவிளைவுகள் முதலாவது மற்றும் இரண்டாவது வக்சீன்களுக்கான பக்கவிளைவுகளைப் போலவே இருக்கும். பொதுவான பக்கவிளைவுகள் வக்சீனை எடுத்துக்கொண்ட பின் சில மணிநேரங்களுக்கு அல்லது சில நாட்களுக்கு நீடிக்கலாம். நீங்கள் வக்சீன் போட்ட இடத்தில் நிறம் மாறுதல், (உதாரணம், சிகப்பு அல்லது நாவல்) வலி அல்லது வீக்கம், மற்றும் களைப்பு, தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி, குளிர் அல்லது லேசான காய்ச்சல் போன்றவை பக்கவிளைவுகளில் உட்படும்.

### வக்சீன் போட்டால் எனக்கு கோவிட்-19 வருமா?

இல்லை. வக்சீன் மூலமாக நீங்கள் கோவி-19 ஐ அல்லது வேறெந்த தொற்றுநோயையோ பெற்றுக்கொள்ள மாட்டீர்கள். ஹெல்த் கனடாவினால் அங்கீகரிக்கப்பட்ட எந்த ஒரு வக்சீனிலும் உயிர் வக்சீன்கள் அதாவது கோவிட்-19 ஐ ஏற்படுத்தும் வைரஸ்கள் இல்லை.

### வக்சீனைப் பெற்றுக்கொண்ட பின்னும் எனக்கு கோவிட்-19 வருமா?

கோவிட்-19 வருவதற்கான அபாயத்தை வக்சீன் குறைக்கும், ஆனால் ஏனைய வக்சீன்களைப் போலவே நோய்தொற்றை முழுமையாக தவிர்க்க முடியாது. அதுவும் குறிப்பாக வைரஸ் சமுதாயத்தில் தொடர்ந்து பரவிவருகிறது என்பதால் நோய் தொற்றை தவிர்க்க முடியாது.

வக்சீன் போட்டுக்கொள்ளுவது, கடுமையாக சுகவீனமடைதல், மருத்துவமனையில் சேர்க்கப்படுதல் மற்றும் மரணமடையும் அபாயத்தில் இருந்து உங்களை கணிசமான அளவு பாதுகாக்கும். கோவிட்-19 இலிருந்து உங்களையும் உங்களை சுற்றியிருப்பவர்களையும் பாதுகாப்பதற்கு இதுவே சிறந்த வழியாகும்.

### கோவிட்-19 வக்சீன் எனது இனப்பெருக்கத் திறனை பாதிக்குமா? நான் கர்ப்பமாக இருந்தாலும் இந்த வக்சீனை போடலாமா?

கோவிட்-19 வக்சீன் இனப்பெருக்கத் திறனை பாதிக்கும் என்பதற்கான ஆதாரம் எதுவும் தற்போது இல்லை.

நீங்கள் கர்ப்பமாவதற்கு முன்பு அல்லது கர்ப்பமாக இருக்கும்போது, பரிந்துரைக்கப்பட்டுள்ள எல்லா கோவிட்-19 வக்சீன்களையும் போட்டுக்கொள்வது உங்களையும் உங்கள் எதிர்கால குழந்தையையும், கர்ப்பமாக இருக்கும் நேரத்தில் கோவிட்-19 வரும் அபாயத்தில் இருந்து பாதுகாக்கும்.

### கர்ப்பமாக இருப்பவர்கள், பாலூட்டும் தாய்கள் அல்லது கர்ப்பமாக முயற்சி செய்கிறவர்கள் கோவிட்-19 வக்சீனை எடுத்துக்கொள்வது பாதுகாப்பானதா?

ஆம். கர்ப்பமாவதற்கு முன்பு அல்லது கர்ப்பமாக இருக்கும் ஒவ்வொரு மூன்று மாதங்களின் போதும் நீங்கள் பாதுகாப்பாக கோவிட்-19 வக்சீனை போட்டுக்கொள்ளலாம். கர்ப்பமாக இருக்கும்போதும் பாலூட்டும்போதும் அல்லது கர்ப்பமாக முயற்சி செய்துகொண்டு இருக்கும்போதும் கோவிட்-19 வக்சீனை எடுத்துக்கொள்வது பாதுகாப்பானது, பயனுள்ளது என்பதோடு, கர்ப்பகால மற்றும் குழந்தை உடல்நலத்திற்கான மாகாண கவுன்சில் (PCMCH), மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவர்கள் (OSOG) மகப்பேறியல் மற்றும் மகப்பேறு மருத்துவர்கள் கனடா சங்கம் (SOGC), நோய்த்தடுப்புக்கான தேசிய ஆலோசனைக் குழு (NACI) மற்றும் பல தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகளால் வெகுவாக பரிந்துரைக்கப்படுகிறது.

கர்ப்பகாலத்தின் போது வரக்கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக வக்சீனைப் பெற்றுக்கொள்வதால் வரும் நன்மைகள் அபாயங்களைவிட மிக உயர்ந்ததாகும். நீங்கள் கர்ப்பமாக இருக்கும்போது உங்களுக்கு கோவிட்-19 வந்துவிட்டால், கர்ப்பமாக இல்லாதவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மருத்துவ மனையில் சேர்க்கப்படுதல், தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுதல் மற்றும் லைஃப் சப்போர்ட் தேவைப்படும் அபாயம் மிக அதிகமாகும்.

வக்சீன், கோவிட்-19 தொற்றுவதிலிருந்து உங்களை பாதுகாப்பதோடு கடுமையான சுகவீனம் மற்றும் கர்ப்பமாக இருக்கும்போது கோவிட்-19 வந்தால் ஏற்படக்கூடிய சிக்கல்களில் இருந்தும் பாதுகாக்கிறது. வக்சீனைப் பெற்ற பின்னர் உங்கள் உடல் உருவாக்கும்

நோயெதிர்ப்பு சக்தியானது தொப்புள் கொடியின் வழியாக மற்றும்/அல்லது தாய்ப்பால் மூலமாக குழந்தைக்கு கடத்தப்படும். இது உங்களுக்கும் உங்கள் குழந்தைக்கும் கோவிட்-19 க்கு எதிரான பெரியளவு பாதுகாப்பை வழங்கும்.

மேலதிக தகவல்களுக்கு ontario.ca/covidvaccinepregnancy.

### எனது பிள்ளைக்கு ஏன் வக்சீன் போடவேண்டும்? கோவிட்-19 பிள்ளைகளுக்கு லேசானதாக இருக்கும் அல்லவா?

பிள்ளைகளுக்கு கோவிட்-19 வரும்போது அறிகுறிகள் லேசானவையாக இருந்தாலும் சிலருக்கு மருத்துவ மனையில் சேர்க்கப்பட, தீவிர சிகிச்சைப் பிரிவில் (ICU) அனுமதிக்கப்பட அல்லது இறந்துபோகக்கூடிய அளவுக்கு கடுமையான சுகவீனம் வரலாம். இன்னும் சிலருக்கு கடுமையான நீண்ட நாட்கள் நீடிக்கக்கூடிய அறிகுறிகள் ஏற்படலாம் (உதாரணம்: நீண்ட கால கோவிட்-19, பிந்திய-கடுமையான கோவிட்-19 நோய்க்குறி). நோயெதிர்ப்பு சக்தி குறைந்த அல்லது வேறு உடல்நலக் கோளாறுகள் உள்ள பிள்ளைகளுக்கு இது விசேஷமாக பொருந்தும்.

பிள்ளைகளுக்கும் இளைஞர்களுக்கும் வக்சீன் கொடுப்பது வைரசினால் கடுமையான சுகவீனமடைதல், மருத்துவமனையில் சேர்த்தல் மற்றும் மரணமடைதலுக்கு எதிரான பலமான அளவு பாதுகாப்பை வழங்கும். இவ்வாறு வக்சீனைப் பெற்றுக்கொள்வது அதை இன்னும் பெற்றுக்கொள்ள முடியாதவர்கள், மற்றும் இலகுவாக நோய்வாய்ப்படக்கூடிய வயோதிபர்கள் போன்ற ஏனைய குடும்ப அங்கத்தவர்களைப் பாதுகாக்கவும் உதவும்.

ஃபைசர் வக்சீனை ஐந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு கொடுக்கவும், மொடர்னா வக்சீனை ஆறு வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு கொடுக்கவும் ஹெல்த் கனடா அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஐந்தும் வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் உள்ள பிள்ளைகளுக்கு ஃபைசர் கோவிட்-19 வக்சீனை வழங்கும்படி பரிந்துரைக்கப்படுகிறது. பிள்ளைகள் ஆறு வயதும் அதற்கு மேற்பட்டவர்களும் என்றால் மொடர்னா கோவிட்-19 வக்சீன் போட்டுக்கொள்ளலாம். ஆனால், மயோகார்டைடிஸ்/பெரிகார்டைடிஸ் ஏற்பட அதிகரிக்கப்பட்ட வாய்ப்பு இருக்கின்றது என்ற தகவல் வழங்கப்பட்டு மற்றும் சம்மதம் பெறப்பட்ட பின்பு இது செய்யப்பட வேண்டும்.

கனடாவிலும் அமெரிக்காவிலும் உள்ள பல லட்சக்கணக்கான பிள்ளைகள் கோவிட்-19 வக்சீனைப் பெற்றுக்கொண்டார்கள். அவர்களில் கவலைக்கிடமான பாதுகாப்பு விளைவுகள் ஏதும் கவனத்தற்கு வரவில்லை.

வேறு நோய்களுக்கான தடுப்புசிகளைப் போலவே, பரிந்துரைக்கப்படும் அனைத்து வக்சீனகளையும் உங்கள் பிள்ளைகள் பெற்றுக்கொண்டால் stay up-to-date அவர்கள் மிகச் சிறந்த பாதுகாப்பைப் பெறுவார்கள். மேலதிக தகவல்களுக்கு ontario.ca/covidvaccinekids க்குச் செல்லுங்கள்.

### வக்சீனில் மைக்ரோ சிப் இருக்கிறதா?

இல்லை.

### கோவிட்-19 வக்சீனுக்கும் ஃப்ளூ வக்சீனுக்கும் என்ன வித்தியாசம்?

கோவிட்-19 வக்சீனும் ஃப்ளூ வக்சீனும் மிகவும் வித்தியாசமானவை என்பதோடு அவற்றை ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. அவை வெவ்வேறு வைரஸ்களை குறிவைக்கின்றன. ஃப்ளூ வக்சீன் பல வகைப்பட்ட இன்ஃப்ளுவென்சா வைரஸ்களை ஒரே நேரத்தில் குறி வைக்கின்றது. கோவிட்-19 வக்சீன் SARS-CoV-2 என்னும் ஒரு வைரசை மட்டும் குறிவைக்கின்றது.

ஃப்ளூ வக்சீன் மற்றும் கோவிட்-19 வக்சீன் வெவ்வேறு வைரஸ்களுக்கு எதிரான பாதுகாப்பை வழங்குவதால் அவை இரண்டையுமே பெற்றுக்கொள்வது முக்கியம். கோவிட்-19 வக்சீனை பெற்றுக்கொள்ளும் அதே நேரத்தில் ஃப்ளூ வக்சீன் மற்றும் வேறு வக்சீன்களை பெற்றுக்கொள்வது பாதுகாப்பானதே. கோவிட்-19 வக்சீன் எடுப்பதற்கு முன்னரோ பின்னரோ 14 நாட்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

### என்னிடம் ஒன்ராரியோ ஹெல்த் இன்சூரன்ஸ் பிலான் (OHIP) இல்லை என்றாலும் நான் வக்சீனைப் பெற்றுக்கொள்ள முடியுமா?

ஒருவரின் குடியுரிமை அல்லது குடிவரவு நிலை எதுவாக இருந்தாலும், அவர் ஒன்ராரியோவில் வசிப்பவர், படிப்பவர் அல்லது வேலைசெய்பவர் அல்லது ஒன்ராரியோவுக்கு வருகை தந்திருப்பவர் என்றால் வக்சீனை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

வக்சீனைப் பெற்றுக்கொள்வதற்கு உங்களிடம் ஒன்ராரியோ ஹெல்த் கார்ட் (ஒன்ராரியோ உடல்நல அட்டை) இருக்க வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் பெயரையும் பிறந்த திகதியையும் காண்பிக்கும் மற்றொரு புகைப்படத்தைக் கொண்டுள்ள அடையாள ஆவணத்தையோ (ID) டிரைவர்ஸ் லைசன்ஸ், பாஸ்போர்ட், பதிவுசெய்யப்பட்ட கடிதம், சம்பளச் சீட்டு, மாணவர் அட்டை, வேறு இடங்களைச் சேர்ந்த அரசாங்கத்தால் வழங்கப்பட்ட அடையாள ஆவணம் போன்ற பல அடையாள ஆவணங்களையோ நீங்கள் பயன்படுத்தலாம். இவை வெளிநாட்டு மற்றும் காலாவதியான அரசாங்க ஆவணங்களை உட்படுத்தலாம்.

உங்களிடம் ஹெல்த் கார்ட் இல்லையென்றால் மற்றும் உங்கள் பொதுசன உடல்நல பிரிவு புரொவின்சியல் வக்சீன் கான்டாக்ட் செண்டர் (PVCC) ஐ உபயோகிக்கிறது என்றால், நீங்கள் நியமனம் ஒன்றை பதிவுசெய்ய 1-833-943-3900 என்ற எண்ணில் PVCC ஐ அழைக்கலாம். வக்சீன் நியமனத்தின்போது ஒரு புகைப்படத்துடன் கூடிய அடையாள ஆவணம் ஒன்றை வழங்கும்படி கேட்டுக்கொள்ளப்படுவீர்கள்.

வக்சீனை பெற்றுக்கொள்வதற்கான உங்கள் தகுதியை உறுதி செய்துகொள்வதற்கும் ஒரு நியமனத்தை பதிவுசெய்ய உதவி பெற்றுக்கொள்வதற்கும் நீங்கள் உங்கள் உள்ளூர் பொதுசன உடல்நலப் பிரிவையும் தொடர்புகொள்ளலாம். உள்ளூர் பொதுசன உடல்நலப் பிரிவை கண்டுபிடிப்பதற்கும் தொடர்பு எண்ணை பெற்றுக்கொள்வதற்கும் ontario.ca/publichealth க்குச் செல்லுங்கள்.

### இரத்த தானம் செய்வது கோவிட்-19 வக்சீனின் வீரியத்தை குறைக்குமா?

இல்லை, இரத்த தானம் செய்வது கோவிட்-19 வக்சீனின் வீரியத்தை குறைக்கும் என்பதற்கான பரிந்துரையோ ஆதாரமோ எதுவும் கிடைக்கப்பெறும் ஆய்வில் இல்லை.

இரத்த தானம் செய்வது உடலில் இருந்து வக்சீனை நீக்கிவிடாது. வக்சீனின் விளைவாக உருவான முக்கியமான நோயை எதிர்த்துப் போராடும் கலன்கள் மற்றும் நோயெதிர்க்கும் காரணிகளையும் உடலில் இருந்து அழித்துவிடாது.

மேலதிக தகவலுக்கு canadianbloodservices க்குச் செல்லுங்கள்.

### எனது வழக்கமான வக்சீன் அட்டவணையில் நான் பின்தங்கியிருக்கிறேன் என்றாலும் கோவிட்-19 வக்சீனை பெற்றுக்கொள்ளலாமா?

ஆம். வழக்கமான வக்சீன் அட்டவணையில் பின்தங்கியிருக்கிறவர்களும் தங்கள் உடல்நல பராமரிப்பாளரை தொடர்புகொண்டு அவற்றை தவறாமல் போட்டுக்கொள்ளும்படி நாங்கள் உற்சாகப்படுத்துகிறோம்.

### மாற்றுத் திறனாளிகள் அல்லது தொடர்புகொள்ள சிரமப்படுகிறவர்களுக்கு என்ன உதவிகள் கிடைக்கும்?

வக்சீன் போடும் இடங்கள் சிரமம் இன்றி செல்லக்கூடியதாக இருக்கவேண்டும். அத்துடன், மாற்றுத் திறனாளிகளோடு சிரமமின்றி தொடர்புகொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். அத்தோடு பின்வரும் தகவலும் கிடைக்கப்பெறும்:

- கோவிட்-19 வக்சீன்கள் பற்றிய தகவல்கள், பராமரிப்பு வழங்குபவர்களுக்கான உதவி மற்றும் ஆதரவு, நம்பகமான வீடியோக்கள் மற்றும் அநேக விஷயங்களுக்கு ConnectABILITY.ca.
- வளர்ச்சி அல்லது மூளை விருத்தி குறைந்த உங்கள் பிள்ளை அல்லது உங்கள் ஆதரவில் இருப்பவருக்கு வக்சீன் கொடுப்பது பற்றிய தகவலுக்கு Health Care Access Research and Developmental Disabilities வெப்சைட்

(www.hcarddcovid.com/info) மற்றும் vaccinesupport.ca க்குச் செல்லுங்கள். (வக்சீன் போடும் இடத்தில் வசதிகள், வீட்டில் வக்சீன் போடுதல், ஊசிபோடப் பயப்படுதல் போன்றவை)

- பாதுகாப்பான போக்குவரத்தை பெற்றுக்கொள்ளும் சவாலையுடைய, நடக்க முடியாத வயோதிபர்கள் உட்பட மாற்றுத்திறன் உள்ளவர்கள் வக்சீன் வழங்கப்படும் இடங்களுக்கு செல்ல வீடு வீடாகச் சென்று வாகனத்தில் அழைத்துச் செல்வதற்கான அக்செசிபிள் டிரைவ்-டு-வக்சீன் புரோகிராம் (கிடைக்கக்கூடிய வாகன உதவி திட்டத்தைப்) பற்றிய தகவலை பெற்றுக்கொள்ள ஒன்ராரியோ கம்யூனிட்டி சப்போர்ட் அசோசியேஷன் (ஒன்ராரியோ சமூக ஆதரவு சங்கம்) (www.ontariocommunitysupport.ca) க்குச் செல்லுங்கள்.

## மேலதிக தகவல்களை நான் எங்கே பெற்றுக்கொள்ளலாம்?

வக்சீன் தகவல் உட்பட தகுதிபெறுதல், ஒரு நியமனத்தை பதிவுசெய்வது எப்படி, எதை எதிர்பார்க்கலாம் மற்றும் அநேக விஷயங்களுக்கும் ஒன்ராரியோவில் கோவிட்-19 வக்சீன்கள் பற்றி மேலும் தெரிந்துகொள்வதற்கும் ontario.ca/covidvaccine க்குச் செல்லுங்கள். அனுபவம் உள்ள ஒரு முகவருடன் அல்லது உடல்நல வல்லுனருடன் பேசுவதற்கு அல்லது மாகாண வக்சீன் தொடர்பு நிலையத்தை தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்: 1-833-943-3900 (காது கேட்காதவர்கள், செவித் திறன் மற்றும் பேச்சுத் திறன் குறைந்தவர்களுக்கு TTY : 1-866-797-0007) 300 க்கும் அதிகமான மொழிகளில், வாரத்தின் ஏழு நாட்களிலும் காலை 8:00 முதல் மாலை 8:00 மணிவரை கிடைக்கப்பெறும்.

பிள்ளைகள், இளைஞர்கள், கர்ப்பமானவர்கள், பாலூட்டும் தாய்மார்கள் அல்லது கர்ப்பமாக முயற்சிசெய்கிறவர்கள் ஆகியோருக்கான கோவிட்-19 வக்சீன்கள் பற்றிய கேள்விகளுக்கும், சிக்கிட்ஸ் குழந்தை மருத்துவ பதிவுசெய்யப்பட்ட தாதி ஒருவருடன் ஒரு அந்தரங்க தொலைபேசி நியமனம் ஒன்றை செய்வதற்கும் sickkids.ca/vaccineconsult அல்லது 1-888-304-6558 மூலமாக சிக்கிட்ஸ் கோவிட்-19 வக்சீன் கொன்சல்ட் சர்விஸ்-ஐ தொடர்பு கொள்ளுங்கள். இந்தச் சேவைகள் பல மொழிகளில் தொலைபேசி மூலமாக மொழிபெயர்ப்பு உதவியைப் பயன்படுத்தியும் கிடைக்கப்பெறும்.

அல்லது, கோவிட்-19 வக்சீன்களைப் பற்றிய தகவலறிந்த தீர்மானங்களை செய்யத் தேவையான உண்மைகளைப் பெற்றுக்கொள்ள தகுதிபெற்ற ஸ்கார்பரோ ஹெல்த் நெட்வர்க் (SHN) மருத்துவருடன் நேரடித் தொலைபேசி ஆலோசனை பெற SHN வக்ஸ்ஃபக்ட் கிளினிக்கை அழையுங்கள். shn.ca/vaxfacts மூலமாக நியமனம் ஒன்றை செய்யுங்கள் அல்லது 416-438-2911, ext. 5738 ஐ அழையுங்கள். வாரத்தின் ஏழு நாட்களிலும் காலை 9 முதல் மாலை 8 வரை 200 மொழிகளில் நியமனங்கள் கிடைக்கப்பெறும்.

Catalogue No. (300935) ISBN No. 978-1-4868-6067-8. PDF May 2022. © Queen's Printer for Ontario 2022.